In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi
S.C.No.97/2022
Deposition of P.W.2

| | |
|---|---|
| Name | திருமதி.லிங்கம்மாள் |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 09th day of March 2026.

(எதிரிகள் ஆஜர் .)

**முதல் விசாரணை :**

நான் நடராஜபுரத்தில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன முருகலெட்சுமி எனது மகள். ஆஜர் எதிரிகள் எனது அண்ணன் கருப்பசாமியின் பிள்ளைகள் ஆவார். முருகலெட்சுமி அவரது கணவரான 1வது எதிரியுடன் தனியாக வசித்து வந்தார். எனது பேத்தி வெங்கடேஸ்வரி வேறு சாதியை சார்ந்த நபரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அதனால் ஏற்பட்ட மனவிரக்தியில் எனதுமகள் தனக்கு தானே தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். மற்றபடி இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கை மெய்ப்பிக்கும் விதமாக சாட்சியம் அளிக்க முன் வராத காரணத்தால் அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞரால் பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு அனுமதி கேட்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது அதன் பேரில் சாட்சி அரசு சிறப்பு குற்றத்துறை வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது அண்ணன் கருப்பசாமியின் மகனான 1வது எதிரி முனியசாமிக்கு எனது மகள் முருகலெட்சுமியை கடந்த 2020ம் வருடத்தில் திருமணம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். திருமணத்தின்பயனாக அவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். 1வது எதிரி மது மற்றும் கஞ்சாவிற்கு அடிமையானவர் என்றால் சரியல்ல. அதனால் 1வது எதிரி அடிக்கடி எனதுமகள் மற்றும பேத்திகளை அடித்து துன்புறுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அதனால் எனது பேத்திகள் மூன்றுபேரும் என்னுடன் தான் வசித்து வந்தனர் என்றால் சரியல்ல. எனது பேத்தி வெங்கடேஸ்வரி திருநெல்வேலி சட்டக்கல்லூரியில் படித்து வந்தபோது அதேகல்லூரியில் படித்துவந்த வீரவநல்லூரை சார்ந்த மந்திரமூர்த்தி என்பவரை காதலித்து வந்தார் என்றால் இதுமட்டும் சரிதான். அதனால் 1 முதல் 5 எதிரிகள் எனது பேத்தி வெங்கடேஸ்வரியை கட்டாயப்படுத்தி வேறு ஒருவருக்கு திருமண நிச்சயதார்த்தம் செய்து வைத்தனர் என்றால் சரியல்ல. இந்நிலையில் கடந்த 22.04.2021ம் தேதி எனது பேத்தி வெங்கடேஸ்வரி நாங்கள் வீட்டில் இல்லாத சமயத்தில் வீட்டைவிட்டு வெளியேறி விட்டார் என்றால் சரியல்ல. இந்த விவரம் அறிந்து 2 முதல் 4 எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து அசிங்கமான வார்த்தைகளால் ஏசி உங்களால் தான் வெங்கடேஸ்வரி எவன் கூடவோ ஓடிபோய்விட்டாள், அவள் மட்டும் வரவில்லை என்றால் உங்கள் எல்லோரையும் வெட்டி கொன்றுவிடுவோம் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. பின்னர் 5வது எதிரி சுப்பிரமணியன் எனது உறவினரான நாகராஜ் என்பவரது செல்போனில் எனது கணவரை தொடர்புகொண்டு அசிங்கமான வார்த்தைகளால் ஏசி நாங்கள் ஏற்பாடு செய்த பையன் கூடதான் திருமணம் நடக்கவேண்டும், இல்லையென்றால்

நடக்கிறதே வேற ஒழுங்காக போயி வெங்கடேஸ்வரியை கூட்டி வாங்க என்று மிரட்டினார் என்றால் சரியல்ல. பின்னர் நானும், எனது கணவரும் நேதாஜி நகரில் வசித்து வரும் எனது மகள் முருகலெட்சுமியை பார்ப்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றபோது எனது மகள் முருகலெட்சுமி அழுதுகொண்டே வெங்கடேஸ்வரி வீட்டிற்கு வரலைனா என்னை கொன்று போட்டுருவேன் என்று 1வது எதிரி முனியசாமி மிரட்டியதாக எங்களிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. கடந்த 23.04.2021ம் தேதி எங்கள் உறவினரான சிவலிங்கம்பிள்ளை என்பவர் எனது கணவருக்கு போன் செய்து 1வது எதிரி முனியசாமியும், 3 வது எதிரி சுப்புராஜும் மதியவேளையில் ஒருபைக்கில் வேகமாக சென்று கொண்டிருந்ததாகவும், அந்த பைக்கில் ரத்தக்கறையாக இருப்பதாகவும் தெரிவித்ததாக எனது கணவர் என்னிடம் தெரிவித்தார் என்றால் சரியல்ல. இந்நிலையில் தெற்குகல்மேடு அருகில் அடையாளம் தெரியாத பெண்ணின்பிரேதம்கிடப்பதாகவும், அதுசம்பந்தமாக தருவைகுளம் காவல்நிலையத்தில் வழகக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் செய்திதாளில் பார்த்து தெரிந்து கொண்டு கடந்த 24.04.2021ம் தேதி நானும், எனது கணவர் நீலமேகமும் தருவைகுளம் காவல் நிலையம் சென்று பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களை பார்த்தபோது அது எனது மகள் முருகலெட்சுமியினுடையது என்று அடையாளம் காட்டினோம் என்றால் சரியல்ல. பின்னர் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருந்த எனது மகள் முருகலெட்சுமியின் பிரேதத்தை அடையாளம் காட்டினோம் என்றால் சரியல்ல. பின்னர் எனதுமகள் முருகலெட்சுமியை 1 முதல் 5 எதிரிகள் கொலை செய்து தீ வைத்து எரித்துள்ளார்கள் என்று போலீசார் விசாரித்தபோது கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பின்னர் காலை

11.30 மணி முதல் 13.30 மணிவரை தூத்துக்குடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து ஆய்வாளர் பிரேதவிசாரணை செய்தபோது நானும் சாட்சியாக உடனிருந்தேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்படி விவரங்களை வாக்குமூலமாக அளித்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றவேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** இல்லை.

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/-எம்.பி.முருகன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.